<u>DEPOSITON OF WITNESS</u>
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC.115/2023 |
| Deposition of Witness | { PW.11 |
| | { Prosecution |
| | { |
| Name | : டாக்டர் கே. சுதாகர் |
| Father's Name | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.07.2025.

2025 ம் ஆண்டு ஜுலை மாதம் 15 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.11 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது எடப்பாடி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிகிறேன். நான் இதற்கு முன்பு இதே மருத்துவமனையில் இதே நிலையில் பணிபுரிந்து வந்தபோது கடந்த 15.04.2018 அன்று வெங்கடாசலம் வயது 50 த/பெ. பழனியப்பன் என்பவரையும், கந்தசாமி வயது 34 த/பெ. பழனியப்பன் என்பவரையும்

பழனிசாமி என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்ததிருந்தார். நான் அவர்களை விசாரித்தபோது அவர்கள் இருவரும் தங்களுக்கு தெரிந்த 6 நபர்கள் கப்பரையான்காட்டில் வைத்து கத்தி, அறுவாள் ஆகியவற்றால் அன்று காலை 9.30 மணிக்கு தாக்கியதாக சொன்னார்கள். பின்பு நான் வெங்கடாசலம் என்பவரை பரிசோதித்தபோது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது. 1) இடது கால் தொடையில் வெட்டுக்காயம் 20x10x4 என்ற அளவில் காணப்பட்டது. 2) வலது கால் தொடையில் 10x5x1 செ.மீ. வெட்டுக்காயம், 3) இடது தோல் பட்டையில் 10x5x5 செ.மீ. வெட்டுக் காயம் ஆகியவை காணப்பட்டது. அதேபோல் கந்தசாமி என்பவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது. 1) வலது தோல் பட்டையில் 10x5x3 செ.மீ. வெட்டுக்காயம், 2) பின் தலையில் 6x4x2 செ.மீ. வெட்டுக் காயம் ஆகியவை காணப்பட்டது. நான் மேற்படி நபர்களுக்கு முதலுதவி சிகிச்சை வழங்கி மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

மேற்படி நபர்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை வழங்க தேவையான வசதிகள் எடப்பாடி அரசு மருத்துவமனையிலேயே உள்ளது என்றால், இல்லை. மேற்படி நபர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் வேலி முள் கட்டையின்மீது விழுந்தால் ஏற்பட் வாய்ப்புள்ளது என்றால், சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ.1 அருவாளால் வெட்டினால் மேற்குறிப்பிட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்றால், சரிதான்.

ஒப்பம்/- டாக்டர்.கே.சுதாகர்

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.